

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 20.12.2025


# பெயர் நீக்கம் மட்டுமே பிரச்சினை அல்ல!

‘மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்ட’த்தின் பெயரை மாற்றி விட்டதும், அதில் இருந்து மகாத்மா காந்தி பெயர் நீக்கப்பட்டதும் மட்டுமே பிரச்சினை அல்ல. அந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கத்தையே சிதைத்து விட்டார்கள் என்பதே முக்கியமானது.

இவர்கள் காந்தியின் பெயரை எடுத்துவிட்டதால் காந்தியடிகளுக்கு எந்தக் குறைபாடும் ஏற்படப் போவது இல்லை. பெயர் நீக்கத்தின் மூலமாக காந்திதான் பேசப் படுகிறாரே தவிர, மற்றவர்கள் அல்ல. ஆனால் ‘காந்தி பெயர் நீக்கம்’ என்ற பிரச்சினைக்குள் மற்ற பிரச்சினைகள் மறைக்கப்படுகின்றன.

‘இந்த விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமியின் நிலைப்பாடு என்ன?’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதும் ஒப்புக்கு ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார் பழனிசாமி. ‘காந்தி பெயரை மறுபடியும் சூட்ட வேண்டும்’ என்று அவர் கோரிக்கை வைத்துள்ளார். மற்றபடி இப்போது செய்துள்ள மாற்றங்கள் அனைத்தையும் பழனிசாமி தலையாட்டி ஏற்றுக் கொள்கிறாரா?

**பா.ஜ.க. எதைக் கொண்டு வந்தாலும் தலையாட்டி ஏற்றுக் கொள்பவர்தான் பழனிசாமி. குடியுரிமைச் சட்டத்தில் பார்த்தோம். ‘எந்தச் சிறுபான்மையினரும் பாதிக்கப்பட மாட்டார்கள்’ என்று சொன்னவர் அவர்தான். மூன்று வேளாண் சட்டத்தில் பார்த்தோம். ‘இது விவசாயிகளுக்கு நன்மை அளிக்கும் சட்டம்’ என்று இந்தியாவிலேயே பச்சைத் துண்டைப் போட்டுக் கொண்டு பச்சைப் பொய் சொன்ன ஒரே பொய்யர் பழனிசாமி மட்டும்தான். அதைத் தான் இப்போதும் செய்கிறார் பழனிசாமி.**

உண்மையில் இந்தச் சட்டத்தை எதிர்க்கப் பல காரணங்கள் இருக்கின்றன.

1. ஒன்றிய அரசு 60 சதவிகிதம் - மாநிலங்கள் 40 சதவிகிதம் என நிதிப் பகிர்வுமுறை என்று மாற்றப்பட்டு இருப்பது மாநிலங்களின் நிதி மூலதனத்தைக் கொள்ளையடிக்கும் வழிமுறை ஆகும். இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கும் நிதியில் இருந்து ஒன்றிய அரசு தனது பங்களிப்பை 40 விழுக்காடு குறைத்துக் கொள்கிறது. ஏற்கனவே தர வேண்டிய நிதியைத் தராமல் இழுத்தடிக்கிறது ஒன்றியம். 4000 கோடி நிதியை தமிழ்நாட்டுக்கு விடுவிக்க எத்தனை போராட்டங்கள் நடைபெற்றது என்பதை அறிவோம். மக்களே வீதிக்கு வந்து போராடினார்கள். இப்போது சொல்லிக் கொள்ளும் 60 விழுக்காட்டையும் தர மாட்டார்கள். அல்லது இழுத்தடித்துக் கொடுப்பார்கள். மக்களுக்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டியவை மாநில அரசுகள்தான். அதனால் மக்களுக்கு மாநில அரசுகள் நிதியைக் கொடுத்தே ஆக வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும்.
2. இப்போது 125 நாட்கள் வேலை என்று சொல்கிறார்களே தவிர, அது உறுதியாக நடக்காது. ஏனென்றால் இதுவரை 100 நாட்கள் வேலையைக்கூட ஒழுங்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒதுக்கவில்லை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 100 நாட்கள் கிடைத்த வேலை, மோடி ஆட்சியில் 30 நாட்கள் கூட கிடைக்கவில்லை. 2021-ஆம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப்பணி அட்டைகள் நீக்கப்பட்டன. இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது.
3. முந்தைய திட்டத்தில் வேலை வழங்குவதற்கு எந்தக் காலமும் தடை இல்லை. இப்போது, அறுவடைக் காலங்களில் 60 நாட்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் வழங்கப்படாது என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது வேளாண் பணி செய்யாதவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும்.
4. ‘ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்படவுள்ள பன்முக வறுமைக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்’ என்று சொல்லப்படுகிறது. வறுமைக் குறியீட்டை அளவீடாக நிர்ணயிக்கும் போது, அது தமிழ்நாடு போன்ற வறுமையை ஒழிக்க நியாயமாகப் போராடி வரும் மாநிலங்களை நேரடியாய் பாதிக்கும்.
5. கிராமப்புற வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்புத் திட்டமாக இதுவரை இது அமைந்திருந்தது. அந்த வகையில் மக்களின் வாழ்க்கையை நோக்குவதாக இந்தத் திட்டம் இருந்தது. இதனை வழக்கம் போல, ‘வளர்ச்சித் திட்டம்’ என்று மாற்றி விட்டார்கள். ‘நாடு வளர்ந்து விட்டது’ என்று சொல்லி எப்போது வேண்டுமானாலும் திட்டத்தை நிறுத்தி விடுவார்கள். ‘வறுமை ஒழிந்துவிட்டது’ என்று ஏதாவது ஒரு புள்ளிவிவரத்தைக் காட்டி, இந்தத் திட்டத்தையே நிறுத்தி விடலாம்.
6. வேலை பெறுவது மக்களின் உரிமை என்று முந்தைய சட்டத்தில் இருந்தது. இப்போது அப்படி இல்லை. வேலை இருந்தால் தருவார்கள்.
7. எந்த மாநிலத்துக்கு எவ்வளவு வேலை வாய்ப்புகளை வழங்குவது என்று ஒன்றிய அரசு முடிவு செய்யலாம் என்று சொல்லி இருப்பது, மாநில சுயாட்சிக் கொள்கைக்கு விரோதம் ஆகும். பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்கள் திட்டமிட்டுப் பழிவாங்கப்படும்.
8. முந்தைய சட்டத்தில் வேலைகேட்டு முறையிட்டால் 15 நாட்களுக்குள் வேலை தர வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. வேலை வழங்க முடியாத நிலையில் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று இருந்தது. அது இப்போது இல்லை.
9. “மொத்தம் 125 நாட்கள் வேலை தருவோம்” என்ற உறுதிமொழியும் இதில் இல்லை.
10. இந்தத் திட்டத்தை எப்போது வேண்டுமானாலும் நிறுத்துவார்கள் என்பதற்காக அனைத்து முன்னோட்டமும் இதில் இருக்கிறது.

**- இந்த அடிப்படையில் முழுக்க முழுக்க எதிர்க்க வேண்டியதாக இருக்கிறது அந்த வாய்க்குள் நுழையாத சட்டம்.**

# “பேராசிரியர் ஐயா! - உங்கள் பெரும்புகழ் வாழுமய்யா!”



கலைஞரைவிட
ஓராண்டு மூத்தவர்
ஆனால் கலைஞரைத்
தலைவராக ஏற்றுக்கொண்டவர்

கட்சியைக்
கட்டியெழுப்பும் வலிமையும்
கட்டிக்காக்கும் திறமையும்
தன்னைவிடக் கலைஞருக்கே
அதிகம் உண்டு என்பதைப்
பொதுவெளியில் ஒப்புக்கொண்டவர்

இனம் மொழி மானம்
என்ற முப்பெரும் தத்துவத்தில்
மூழ்கிப்போனவர்

எந்தப் பொதுமேடைக்கும்
தயாரிக்காதவர்.
ஆனால், தயாரித்தவர்களைத்
தாண்டிப் பேசியவர்

வெற்றிலை போட்டுச் சிவந்ததா
அல்லது
செந்தமிழ் போட்டுச் சிவந்ததா
என்னும் செவ்வாயழகர்

இந்த இயக்கத்தில்
இரண்டாம் இடம் எனக்கு.

முதலிடம் ஏறவும் மாட்டேன்;
மூன்றாமிடம் வீழவும் மாட்டேன்
என்ற கொள்கைக் கோமான்

அலை
எழுந்தாலும் விழுந்தாலும்
கவிழாத படகுபோல,

சிறை என்றபோதும்
அமைச்சர் அறையென்றபோதும்
இரண்டையும் நிகராய்
ஏற்றுக்கொண்டவர்

இறுதிவரைக்கும்
கலைஞரின் அடுத்த
நாற்காலியில் அமர்ந்த அண்ணன்

இந்த இருவரையும்
பார்த்துப் பழகியதும்
கேட்டு ரசித்ததும்
நான் தமிழ்படித்த பயன்கள்;
வாழ்வில் மறக்கமுடியாத
ஞாபக ரத்தினங்கள்

பேராசிரியர் ஐயா! – உங்கள்
பெரும்புகழ் வாழுமய்யா!

- கவிப்பேரரசு வைரமுத்து

# ‘சிறந்த நாடாளுமன்ற வாழ்நாள் சாதனையாளர்’ விருது!

## டி.ஆர்.பாலுவுக்கு லோக்மத் ஊடகக் குழுமம் வழங்கியது!

*புதுடெல்லி, டிச. 20 -*

லோக்மத் ஊடகக் குழுமம் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் பணியைப் பாராட்டும் முகத்தான் விருது வழங்கி கௌரவப்படுத்தி வருகிறது. லோக்மத் பார்லிமெண்டரி அவார்டு என பெயர் சூட்டப்பட்ட இந்த விருது சென்ற ஏழு வருடங்களாக மும்பையை தலைமையிடமாகக் கொண்ட புகழ்பெற்ற லோக்மத் ஊடகக் குழுமத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா புது டெல்லியில் உள்ள மகாராஷ்டிர சதனில் 17.12.2025 அன்று லோக்மத் தேசிய மாநாட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் தி.மு.க. மக்களவை குழுத் தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்களுக்கு நாடாளுமன்ற வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இந்த விருதை முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் பி.ஆர்.கவாய் அவர்கள் வழங்கி சிறப்பித்தார. லோக்மத் குழுமத்தின் தலைவர் டாக்டர் விஜய் தர்தா, முன்னாள் மத்திய அமைச்சரும் விருதுகள் தேர்வுக் குழுவின் தலைவர் பிரஃபுல் பட்டேல் உள்ளிட்ட பலர் விழாவில் பங்கேற்று டி.ஆர்.பாலு அவர்களின் நீண்ட நாள் பாராளுமன்ற பணிகளைப் பாராட்டி பேசினர்.



கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக திறம்பட பணியாற்றி வருகிறார். இதில் 1986 முதல் 1992 வரை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் குறிப்பிடத்தக்கது. டி.ஆர்.பாலு அவர்களின் நாடாளுமன்ற உரைகள் “குரலற்றவரின் குரல்” என தமிழிலும் “The Voice of the Vouceless” என்ற தலைப்பில் நூல்களாக தொகுக்கப்பட்டு இவ்விரு நூல்களும் தமிழக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

## புதிய வாக்காளர் சேர்ப்பு!

# இன்றும் - நாளையும் சிறப்பு முகாம்!

சென்னை,டிச.20-

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம்-2026 (Special Intensive Revision - 2026)க்கான வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று (19.12.2025) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் அனைத்து வாக்குச்சாவடி பதிவு அலுவலர் அலுவலகங்களிலும் (பெருநகர சென்னை மாநகராட்சியின் 4, 5, 6, 8, 9, 10, 13 ஆகிய மண்டல அலுவலகங்களில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களில்) மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத புதிய வாக்காளர்கள் மற்றும் 01.01.2026 மையநாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்களுக்காக இன்று 20.12.2025 நாளை 21.12.2025 (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இருநாட்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

இம்முகாம்களில், வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள் / தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தி அடைந்த இளம் வாக்காளர்கள் படிவம் 6-ஐ பூர்த்தி செய்து தங்களது பெயர்களை சேர்க்கலாம். வாக்காளர் பட்டியலில் நிரந்தர இடமாற்ற பதிவுகள், இறந்தோர் மற்றும் ஆட்சேபனை தொடர்பான பெயர் நீக்கம் தொடர்பாக படிவம் 7-ஐ பூர்த்தி செய்தும், சட்டமன்றத் தொகுதிகளிலேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் தங்கள் பெயரை சேர்க்கவோ (அ) மாற்றவோ விருப்பப்பட்டால் படிவம் 8-ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகல்களை இணைத்து விண்ணப்பிக்கலாம். மேலும், சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலரிடமும் சமர்ப்பிக்கலாம். மேலும் https://voters.eci.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், தங்களுடைய பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளலாம்.


